**Starting time 01.23 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 67/2012**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 19.01.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : பிரதிவாதி மூர்த்தி என்னுடைய தம்பி என்றால், ஆமாம். என் தகப்பனார் பெயர், அழகப்பன், எனது தாயார் அஞ்சலம்மாள் என்றால், ஆமாம். என் உடன் பிறந்தவர்கள் இரண்டு பேர் என்றாலும், என்னுடைய மூத்த அண்ணன் சுப்ரமணி என்றாலும், எனக்கு இளையவர்தான் பிரதிவாதி என்றாலும், சரிதான். என்னுடன் பிறந்த சகோதரி திருமணமாகி உள்ளூரில் தான் வசித்து வருகிறார் என்றால், ஆமாம். எனக்கு தாவா முதலின சொத்து பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்றால், சரிதான்.

2. 20.02.1997-ல் என் தகப்பனாரும், நாங்கள் மூவரும் பரம்பரை கூட்டுக் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால், ஆமாம். அந்த பாகப்பிரிவினையில் என்னுடைய சகோதரி மலர்கொடி சம்மந்தப்படவில்லை என்றால், ஆமாம். என்னுடைய சகோதரி எங்களுக்கு விடுதலை பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால், ஆமாம். மலர்கொடியை பாகப்பிரிவினைப்பத்திரத்தில்

சேர்க்காததால் அது முழுமையடைந்த ஆவணம் அல்ல என்றால், சரியல்ல.

3. தாவா சொத்து பனைமடல் கிராமத்தில் இருக்கிறது என்றால், ஆமாம். ஏத்தாப்பூரிலிருந்து தும்பல் போகும் ரோட்டிற்கு கிழக்குப்புறத்தில் உள்ள சொத்திற்காக இந்த வழக்கு நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என்னுடைய வழக்கு சொத்து விவரத்தில் பனைமடல் கிராமத்தில் புல எண். 274/1-ல் 1.08.5 ஹெக். நிலத்தில் 0.86 செண்ட் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால், ஆமாம். புல எண். 274/5-ல் பு.ஹெக்.0.81.0 இதில் பொதுவில் ஏக். 1.82 செண்ட் நிலத்திற்கு ஆக ஏக்கர் 2.48 செண்ட் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால், ஆமாம்.

4. மேற்படி 2 நிலங்களுக்கும் தாவா சொத்து விவரத்தில் நான் செக்குபந்தி விவரம் கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான். புல எண். 274/1-ல் ஒரு கிணறு இருக்கிறது என்றால், ஆமாம். அதில் மோட்டார் பம்ப் செட்டும், மின் இணைப்பு எண். 89-ம் அமைந்துள்ளது என்றால், ஆமாம். அந்த மின் மோட்டாரிலும், கிணற்றிலும், மின் இணைப்பிலும் எனக்கும் பிரதிவாதிக்கும் சரி பாதி என்றால், ஆமாம். தாவா சொத்து விவரத்தில் செக்குபந்தி குறிப்பிடாததற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா என்றால், இல்லை.

5. சொத்துக்களின் செக்குபந்தி விவரம் போட்டால், சொத்தின் அமைப்பு மாறிவிடும் என்பதற்காகத்தான் நான் சொத்து விவரம் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். பனைமல் கிராமத்திற்கு தெற்கு புறத்தில் தான் என்னுடைய நிலம் அமைந்துள்ளது என்றால், சரிதான். தாவா சொத்துக்களுக்கு மேற்குபுறத்திற்கு ஒட்டினாற்போல் ஒரு ஓடை செல்கிறது என்றால், ஆமாம். அந்த ஓடை வடக்கிலிருந்து தெற்காக சென்று பின்னிட்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று எதுவரையிலும் செல்கிறது என்றால், மலை வரை செல்கிறது.

6. என் நிலத்தை ஒட்டியுள்ள ரோடானது வடகிழக்கு மூலையிலிருந்து தென்மேற்கு மூலை வரை செல்கிறது என்றால், ஆமாம். பனைமடல் மெயின் ரோடிலிருந்தே அந்த ஓடை

தொடர்ச்சியாக வந்து நெடுக செல்கிறது என்றால், ஆமாம். அந்த ஓடை 30 அடி அகலம் இருக்குமா என்றால், 10 அல்லது 15 அடி இருக்கும். அந்த ஓடையின் புல வரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால், இல்லை. அந்த ஓடை எங்கிருந்து எங்கு செல்கிறது என்றால், கல்ராயன் மலையிலிருந்து வந்து மேற்கு நோக்கி வசிஷ்ட நதி வரையிலும் செல்கிறது. இந்த ஓடையானது எனக்கு நினைவு தெரிந்த காலத்திற்கு முன்பிருந்தே இருக்கிறது என்றால், ஆமாம்.

7. எங்களுடைய பாகப்பிரிவினை பத்திரத்தில் ஓடை பற்றி எதுவும் சொல்லப்படவிடல்லை என்றால், வா.சா.ஆ.1-ல் காட்டப்படவில்லை, வா.சா.ஆ.2-ல் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2-ல் கண்டுள்ள சொத்திற்கு நான் வழக்கு போடவில்லை என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 சொத்திற்கும் தாவா சொத்திற்கும் வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் அந்த ஓடை செல்கிறது என்றால், ஆமாம். என்னுடைய வசதிக்காக தாவா சொத்து விவரத்திலும், வா.சா.ஆ.1-லும் ஓடையை காண்பிக்காமல் விட்டுவிட்டேன் என்றால், சரியல்ல.

8. நான் எதுவரையிலும் படித்துள்ளேன் என்றால், 10-ஆம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய பட்டா நிலத்தில் ஓடை போகவில்லை என்றால், ஆமாம். A அட்டவணையில் கண்டுள்ள சொத்து விவரத்தில் உள்ள தடம் வண்டிப்பாதையே அல்ல, அதை நாங்கள் பயன்படுத்தவும் இல்லை என்றால், ஆமாம். எதற்காக தாவாவில் 2-வது இன சொத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால், என் பாகத்திலும், பிரதிவாதி பாகத்திலும் தடம் இல்லை, அவரவர் பாகத்தில் அவரவர் சென்று கொள்ள வேண்டும். தாவா B அட்டவணை சொத்து விவரத்தில் உள்ள வண்டிப்பாதை இருக்கிறதா என்றால், இல்லை.

9. தாவா B அட்டவணை சொத்து விவரத்தில் எந்தெந்த புல எண்களில் வண்டி பாதை செல்கிறது என்பது பற்றிய விவரமும், அளவும் எதுவும் இல்லை என்றால், இல்லை. தாவா B அட்டவணை வண்டி தடத்தை நான் பயன்படுத்தவில்லை என்றால், சரியல்ல, இருக்கிறது. எனக்கு சொந்தமான புல எண்களில் வண்டித்தடம் செல்வதாக B

அட்டவணை சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால், ஓடைக்கு கிழக்கில் புல எண். 274/2 மற்றும் 5-ல் வண்டித்தடம் செல்கிறது. அது பற்றி சொத்து விவரத்தில் நான் சொல்லவில்லை என்றால், ஆமாம்.

10. எந்தெந்த புல எண்களில் எவ்வளவு அளவுகளில் வண்டிப்பாதை செல்கிறது என்பது பற்றி தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடாமல் வழக்கே தவறாக போட்டுள்ளேன் என்றால், சரியல்ல. எனவே இந்த வழக்கே 2-வது இன சொத்தை பொறுத்து செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா A அட்டவணை சொத்தை ஒட்டினாற்போல மேற்குபுறமும், தெற்குபுறமும் வண்டிப்பாதை செல்வதாக நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஒட்டினாற்போல் செல்லவில்லை, புல எண் 274/1-ல் செல்கிறது. மேற்படி சங்கதியை நான் வழக்குரையில் சொல்லாமல் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

11. புல எண். 274/1-லும் 274/5 லும் 2-வது இன சொத்து வண்டித்தடம் செல்வதாக எனது சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால், சரியல்ல, சொல்லியுள்ளேன். தாவா சொத்து விவரத்தில் சொல்லாததை தற்போது சொல்லியுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.59 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.